8. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | நாரம்மல | தம்பதெனிய ஹத்பற்று பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், குருநாகல் |

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

*சிங்கள மொழி பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – கேகாலை மாவட்டம்*

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**– க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி. மீ. வரையிலான தூரத்தில் பிரிவில் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யு. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி மாதம் 08.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| கேகாலை | நம்புக்கனை | நம்புக்கனை பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கேகாலை. |

*03-41*

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /(பொது) பதிவாளர் பதவி – புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், வயது 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்**.- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | மஹாவெவ | வலஹாபிட்டிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வடக்கு பிட்டிகல் கோறளை பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம். |

03-42

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

சிங்கள மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /(கண்டிய/பொது) பதிவாளர் பதவி – அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரராகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தானவராகவும் பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா. த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2024, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | தெஹிஅத்தகண்டிய | நவமெதகம பிரிவின் பிறப்பு, இறப்பு பதிவாளர் மற்றும் பின்தென்ன பற்று தெற்கு பிரிவின் விவாகப் பதிவாளர் (கண்டிய/பொது) பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டப் பதிவகம், அம்பாறை. |

03-43

---

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

(மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு)

(01) **நிருவாக உத்தியோகத்தர் - 01 பதவி**

01. **வயதெல்லை :** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்கும் குறையாத 45 வயதிற்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது.)

02. **கல்வி தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவள முகாமைத்துவம் /வணிகம் / அரச நிருவாகம்/அரச முகாமைத்துவம் /முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** *(கீழே 1 அல்லது 2)*

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA I) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உற்பட்ட பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 5 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்.-**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிபடுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

04. **சம்பள அளவுத்திட்டம்** : JM1-1 : ரூபா *(42,600-10×755-18×1,135-ரூபா 70,580)*

(02) **பதவி : உதவி பதிவாளர் (பதவி 01)**

01. **வயதெல்லை :** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்கும் குறையாத 45 வயதிற்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது.)

02. **கல்வி தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச நிருவாகம்/அரச முகாமைத்துவம்/முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** *(கீழே 1 அல்லது 2)*

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA I) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உற்பட்ட பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்.-**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிபடுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

04. **சம்பள அளவுத்திட்டம்** : JM1-1 : ரூபா *(42,600-10×755-18×1,135-ரூபா 70,580)*

(03) **கணக்கு உத்தியோகத்தர் - 01 பதவி**

01. **வயதெல்லை :** விண்ணப்பம் பொறுப்பேற்கப்படும் இறுதி திகதியன்று 22 வயதிற்கும் குறையாத 45 வயதிற்கு கூடாதிருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை உட்படாது.)

02. **கல்வி தகைமை: வெளிவாரி விண்ணப்பதாரிகள்** *(கீழே 1 அல்லது 2)*

i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீடு/ வணிகம்/ வியாபார முகாமைத்துவம்/முகாமைத்துவ பட்டம் பெற்றிருத்தல்.

ii. பதவிக்குரிய பாடத்துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பட்டைய தொழில்வாண்மையான நிறுவனம் ஒன்றில் உள்வாரியாக இடைநிலை பரீட்சையில் சித்திப்பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்** *(கீழே 1 அல்லது 2)*

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தமையை பெற்றிருத்தல்.
2. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA I) சேவைப்பிரிவில் II ஆம் தரத்திற்கு உற்பட்ட பதவி ஒன்றில் குறைந்த பட்சம் 05 வருடங்கள் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருத்தல்.

03. **நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல்.-**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவங்கள் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் மற்றும் செயல் முன்னேற்றங்கள் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையில் வெளிபடுத்தும் திறன்கள் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

04. **சம்பள அளவுத்திட்டம்** : JM1-1 : ரூபா (42,600-10×775-18×1,135-ரூபா 70,580)

04. **பதவி : ஆங்கில போதனாசிரியர்** (பதவி 01)

01. **வயதெல்லை** : விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதி தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

**கல்வித் தகைமை** : வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு (கீழேயுள்ள 1 அல்லது 2 அல்லது 3)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பான இளமாணிப் பட்டம்/ஆங்கிலம் தொடர்பான பட்டம்

அல்லது

02. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஆறாம் (06) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 05 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

03. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஐந்தாம் (05) தரத்திற்கு குறையாத தரத்திலான ஆங்கில புலமைச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

தகைமையினை பெற்ற பின்னர் அரசாங்க, அரச கூட்டுத்தாபனம், சபை அல்லது நியதி நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது உரிய துறையில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

01. மேற்குறித்த வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரிய தகைமையை பூர்த்திசெய்திருத்தல்

02. **நேர்காணலில் புள்ளிகள் வழங்கும் முறை :**

| | |
|---|---|
| உரிய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| உரிய மேலதிக கல்வித் தகைமை | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள்/செயல் முன்னேற்றம் | 15 புள்ளிகள் |
| நேர்முகப் பரீட்சையின் செயலாற்றுகை | 25 புள்ளிகள் |
| | ----- |
| மொத்தப் புள்ளிகள் | 100 |
| | ----- |

(05) **சம்பள அளவுத் திட்டம்**: MA 4 - ரூபா. (37×970 - 10 × 755 - 15 × 930 - 5 × 1,135- 65,145)

**அனைத்து பதவிகளுக்குமான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும்
2. பதவி நிரந்தரமானது

3. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்.
4. மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டது.

**குறிப்பு**: இப் பதவிகளுக்கான வெற்றிடங்கள் சீதுவை பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் பிரதான அலுவலகத்தில் கடமையாற்ற வேண்டும்.

*சேவை நிபந்தனை* : 1992 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவன சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு கீழ்படிதல் வேண்டும்.

*இணைத்துக்கொள்ளும் முறை* : நியமண அதிகாரியின் பணிப்பின் பேரில் நேர்காணல் குழுவினால் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் நடாத்தப்படும். அதிக புள்ளிகளை பெற்றவர்களுள் திறமை அடிப்படையில் தெரிவு நடைபெறும்

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2024.03.15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

கலாநிதி. ரவீந்திர விதானச்சி,
பணிப்பாளர் நாயகம் (ப.க)

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.
பணிப்பாளர் நாயகம் (ப.க.),
தேசிய சமூக அபிவருத்தி நிறுவனம்,
லியனகேமுல்லை, சீதுவை,
2024.02.29.

03-149

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

### சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகையின் (MN 03 - 2006 A) திணைக்களம் சார் பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024

சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகையின் (MN - 03) திணைக்களம் சார் கீழ் குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 04 | தொழினுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | 07 |
| 05 | தொழினுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | 03 |

02. **தேவையான தகைமைகள்:**

2.1 **கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகள்**

| தொடர் இல. | பதவி | கல்வித் தகைமைகள் | தொழில்சார் தகைமைகள் |
|---|---|---|---|
| 01 | தொழினுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | (அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் சிங்களம் / தமிழ் /ஆங்கிலம், கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்குத் திறமைச் சித்திகள் சகிதம் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல்.<br>அல்லது<br>தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை இன்றி) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத்திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 04 இனை பெற்றிருத்தல். | (i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்ப டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(v) இலங்கைபொறியியல்நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்)<br>அல்லது<br>(vi) தொழிற் துறையுடன் தொடர்புறும் வண்ணம் தேசிய தொழில்சார் திறன்கள் (NVQ) 05 அல்லது 06 ஆம் மட்ட தகைமையினைப் பூரணப் படுத்தியிருத்தல். |
| 02 | தொழினுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | (அ) க.பொ.த. (சா.த) பரீட்சையில் சிங்களம் /தமிழ் /ஆங்கிலம், கணிதம் மற்றும் இன்னும் இரண்டு பாடங்களுக்குத் திறமைச் சித்திகள் சகிதம் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந் திருத்தல்.<br>அல்லது<br>தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 03 இனை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br>(ஆ) க.பொ.த. (உ.த) பரீட்சையில் அனைத்துப் பாடங்களிலும் (சாதாரண பொதுப் பரீட்சை இன்றி) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத் திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.<br>அல்லது<br>தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ) 04 இனை பெற்றிருத்தல். | (i) மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழினுட்ப டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(ii) தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(iii) திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழினுட்ப டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(iv) கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(v) இலங்கைபொறியியல்நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (மின்னியல்)<br>அல்லது<br>(vi) தொழிற் துறையுடன் தொடர்புறும் வண்ணம் தேசிய தொழில்சார் திறன்கள் (NVQ) 05 அல்லது 06 ஆம் மட்ட தகைமையினைப் பூரணப்படுத்தி யிருத்தல். |

2.2 **தேகாரோக்கியம்**:
அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராதல் வேண்டும்.

2.3 **வயது**: 18 வருடங்களுக்கு குறையாத - 30 வருடங்களுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

2.4 **ஏனையவை** :

i. இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
ii. சிறந்த ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
iii. விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற இறுதித் திகதியாகுகையில் இப் பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை அனைத்து விதங்களிலும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

03. **ஆட்சேர்க்கும் எழுத்து மூலப் பரீட்சை** :

| வினாப்பத்திரம் | பாடத் திட்டம் | நேரம் | மொத்த புள்ளிகள் | தேர்ச்சிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1. நுண்ணறிவு மற்றும் பொது அறிவு | உலக ரீதியாக மற்றும் இலங்கையில் தற்கால முக்கியத்துவம் மிக்க கலாசார, சமூகவியல். பொருளாதார, அரசியல், தொழினுட்ப, விஞ்ஞான, விளையாட்டு மற்றும் சூழலியல் போன்ற விடயங்களிலான சம்பவங்கள் பற்றிய அறிவினைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்படும் பொதுவானதோர் வினாப்பத்திரமாகும். | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. தொழினுட்ப அறிவு | ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக அமையும் தொழினுட்ப அறிவுடன் கூடிய வினாப்பத்திரமாகும். அதற்கான பாடத்திட்டம் கீழே காட்டப்படுகின்றது. | 1 ½ மணித்தியாலம் | 100 | 40% |

| பதவி | தொழினுட்ப அறிவுப் பாடத்திட்டம் |
|---|---|
| 04. தொழினுட்ப உத்தியோகத்தர் (சிவில்) | 1. Concrete<br>Concrete கலவை<br>Concrete கலவை வகைகள் மற்றும் அதன் படி இடப்படும் இடங்கள்.<br>Concrete Curing பண்ணும் விதம்<br>Concrete Mix பண்ணும் விதம்<br>Concrete Mix பண்ண உபயோகிக்கும் machines (Vibrator, Mixing Drum)<br>Concrete தரத்தினைப் பரிசோதித்தல் (Slump Test / Cube Test)<br>2. கூரைகள்<br>சிவிலிம் வகைகள் (Asbestos கூரை)<br>கூரைகள்<br>ஓட்டுக் கூரை<br>அஸ்பஸ்டஸ் கூரை<br>3. படமொன்றின் அடிப்படையில் "Volume area" கணிப்பிடுதல்<br>4. Contraction களுக்கு உபயோகிக்கப்படும் பலகை வகைகள், பலகைகளினால் இடப்படுபவற்றின் பாதுகாப்பு முறைகள்.<br>5. சுவர், தரைக்காக மேற்கொள்ளப்படும் Finishing<br>Plastering – Plastering இன் கலவை<br>Plastering இடப்படும் இடங்கள்.<br>Tiling – Tile வகைகள்<br>Painting – Paint வகைகள் மற்றும் அவை பாவிக்கப்படும் இடங்கள். |

| பதவி | தொழினுட்ப அறிவுப் பாடத்திட்டம் |
|---|---|
| 02. தொழினுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) | 1. மின் பாதுகாப்பு<br>2. மின் உதிரிப்பாகங்கள்<br>I.<br>a) எஞ்சிய மின் சுற்றுப் பிரிப்பான் (Residual Current Circuit Breaker–RCCB)<br>b) மினியேச்சர் சுற்றுப் பிரிப்பான் (Miniature Circuit Breaker – MCB)<br>c) பூமி கசிவு சுற்றுப் பிரிப்பான் (Earth Leakage Circuit Breaker – ELCB)<br>II.<br>a) Timers<br>b) Relays<br>c) Contactors<br>d) Overload Protection<br>e) Direct on – line starter<br>f) Star – Delta Convertor<br>III. வீட்டு மின்சுற்றியல் |

04. **சம்பளப் பரிமாணம்**:

ரூபாய் 31,040 -10 × 445 -11×660 -10×730 - 10×750 - ரூ. 57,550.00
MN 03 - 2006(ஏ) (பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 03/2016 இன் உப அட்டவணை (i) இன் படி)

05. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

i. ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு இணங்குதல் வேண்டும்.
ii. நியமிக்கப்படும் பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களுக்குத் தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது பணிக்கப்படுகின்ற விதத்தில் தங்களினால் அதற்கான உதவுத் தொகைகளைச் செலுத்துதல் வேண்டும்.
iii. இந் நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், ஆட்சேர்க்கப்பட்டு மூன்று (03) வருடங்களினுள் முதலாம் தகுதிகாண் தடைப்பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.
iv. பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி மற்றும் அதன் இணைச் சுற்றுநிருபங்களின் படி பதவியில் நியமனம் பெற்று 05 வருடங்களினுள் உரிய அரச மொழி பற்றிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
v. பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிக் கோவைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், அரசினால் வெளியிடப்படும் சுற்றுநிருப விதிமுறைகளுக்கும், சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகை (MN 03 - 2006 A) இற்கான ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கும், சுகாதாரச் செயலாளரினால் வெளியிடப்படுகின்ற சுற்றுநிருபங்கள் மற்றும் பொது விதிமுறைகளுக்கும் இந் நியமனம் உட்படுகின்றது.
vi. தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படுகின்ற மொழிமூலமே, தாங்கள் நியமனத்தினைப் பெறுவதற்குத் தகைமை பெறும் மொழிமூலம் ஆகும்.

06. **விண்ணப்பிக்க வேண்டிய முறை** :

(அ) விண்ணப்பதாரிகள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி தயாரித்து, விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்

தொழினுட்ப (MN 03 - 2006 A) சேவை வகையின் திணைக்களம் சார் ........................................ (விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த - 2024" எனக் குறிப்பிட்டு, 2024.03.22 ஆந் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்) 07, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" இலக்கம் 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 2024.03.22

(இ) பரீட்சைக் கட்டணம் ரூ. 1,000.00 ஆகும். இலங்கை வங்கியின் தப்பிரபேன் கிளையில் சுகாதார செயலாளரின் பெயரில் உள்ள கணக்கிலக்கம் 7041318 கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வண்ணம் இத் தொகையினை ஏதேனுமோர் இலங்கை வங்கிக் கிளைக்குச் செலுத்திப் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் காட்டப்பட்டுள்ள கூண்டினுள் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும். எந்தவொரு காரணத்தினைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதுடன், எதிர்கால பயன்பாட்டின் பொருட்டு விண்ணப்பத்தின் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தம்மிடத்தே வைத்துக் கொள்ளுதல் உகந்ததாகும். (காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(உ) விண்ணப்பங்களைத் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பங்களை அனுப்பியதன் பின்னர் அது தொடர்பில் இடம்பெறும் எவ்விதமான மாற்றங்கள் பற்றியும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

**07. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்துப் பாடங்களின் போதும் மண்டப பொறுப்பாளர் திருப்தியடையும் வண்ணம் தமது சுய ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் காட்டப்படும் எந்தவோர் ஆவணமும் ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு.
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சை மண்டபத்தில் நுழையும் போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள இயலும் வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாமல் பரீட்சை மண்டபத்தில் உள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதனை நிராகரிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தில் உள்நுழைந்த நேரத்தில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பதாரியை இனங்காணக் கூடிய வண்ணம் முகம் மற்றும் காதுகளை மூடாது இருத்தல் வேண்டும். இதற்கு மேலதிகமாக பரீட்சை தொடர்பில் தேவைப்படக் கூடிய பிற அறிவுறுத்தல்கள் பரீட்சை அனுமதி அட்டை மூலம் தங்களிடத்தே அறியத் தரப்படும். பரீட்சை தொடர்பிலான இந் நியமங்களுக்கு முரணாக கருமமாற்றும் விண்ணப்பதாரிகளை பரீட்சை மண்டபத்திற்கு உள்வாங்காமை / பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேற்றும் அதிகாரம் மண்டப பொறுப்பாளரைச் சாரும்.

**08. கையொப்பத்தினை உறுதிப்படுத்துதல்**

அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது இலங்கை நிர்வாக சேவையின்/ கல்வி நிர்வாக சேவையின் / அரச கணக்காளர் சேவையின் ரூ. 240,360.00 இலும் கூடிய அடிப்படை வருடாந்த சம்பளமொன்றினைப் பெறும் அரசின் நிரந்தரப் பதவியொன்றினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**09. போலியான தகவல்களை வழங்குதல்**

விண்ணப்பத்தினை பூரணப்படுத்துகையில் மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப் பரீட்சையின் சட்டதிட்டங்களின் படி யாதேனுமோர் பரீட்சார்த்தியினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிரூபணமாயின் தங்களது பரீட்சார்த்தி நிலை இரத்துச் செய்யப்படும். அவ்வாறான பொய் அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னரான ஏதேனுமோர் சந்தர்ப்பத்தில் நிரூபணமாயின் அதற்குரிய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*10.* **பரீட்சை நிபந்தனைகள்**

i. பதவியில் ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளையும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியாகுகையில் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும். உரிய தகைமைகளைப் பூரணப்படுத்தியிராத விண்ணப்பதாரிகள் பரீட்சையில் போதிய அளவிலான புள்ளிகளைப் பெற்றிருப்பினும் நியமனங்களைப் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் ஆவர்.

ii. பதவிகள் சிலவற்றுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன், ஒரு கடித உறையில் ஒரு பதவிக்கான விண்ணப்பத்தினை மட்டுமே இட்டு அனுப்புதல் வேண்டும்.

iii. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்ப படிவத்துடன் இணங்காத விண்ணப்பங்கள் மற்றும் பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

iv. விண்ணப்பங்கள் கிடைத்தமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

v. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமை உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன்கூட்டிய முடிவின் அடிப்படையில் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்கள் போட்டிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறியத்தரப்படும்.

vi. ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சை நுண்ணறிவு மற்றும் பொது அறிவு அத்துடன் தொழினுட்ப அறிவு எனும் இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டமைவதுடன், ஒவ்வொரு பதவிக்காகவும் வெவ்வேறான வகையில் தொழினுட்ப அறிவு கொண்ட வினாப்பத்திரமொன்று தயாரிக்கப்படும்.

vii. மேற்குறித்த இரண்டு பரீட்சைகளிலும் சித்தியடைந்தவர்கள் மட்டுமே ஆட்சேர்ப்பு பரீட்சையில் சித்தியடைந்த வர்களாக கருதப்படுவார்கள். போட்டிப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் கீழ் நேர்முகப் பரீட்சையின் மூலம் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவதுடன், அவ்வாறு தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் சுகாதார அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள வைத்தியசாலைகள், நிறுவனங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு நியமிக்கப்பட உள்ளார்கள்.

viii. பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மொழிமூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் விரும்பும் ஒரு மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்ற முடிவதுடன், விண்ணப்பிக்கும் மொழிமூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது. பரீட்சார்த்திகள் இப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் ஒரு மொழியினால் மட்டுமே பதில் அளித்தல் வேண்டும்.

**கவனத்திற் கொள்ளவும்:-**

(அ) விண்ணப்பத்தின் அனைத்து வாசகங்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் குறித்த தகவல்களின் நம்பகத்தன்மை தொடர்பில் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறியத்தரப்படும் சந்தர்ப்பங்களில், குறித்த ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. அவ்வாறின்றி விண்ணப்பத்துடன் எவ்விதத்திலும் தொடர்பற்ற ஆவணங்கள் அல்லது அதன் பிரதியினை இணைத்தல் கூடாது.

(இ) விண்ணப்பம் அல்லது அது தொடர்பிலான கடிதமொன்று தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமடைந்ததாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே தாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(ஈ) ஒரு கடித உறையின் மூலம் விண்ணப்பங்கள் சிலவற்றினை அனுப்பியிருக்கையில், கடித உறையில் காட்டப்பட்டுள்ள பதவிக்காக மட்டும் பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், ஏனைய விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(உ) நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் எண்ணிக்கை, பதவிகளுக்கு நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் செயற்படுத்தப்படும் திகதி என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்களின் ஏதேனுமோர் எண்ணிக்கையினை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

(ஊ) பதவிக்கு ஆட்சேர்த்தல் தொடர்பில் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்வாங்கப்பட்டுள்ள அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பில் சிக்கலானதோர் நிலை ஏற்படின் அது பற்றிய சுகாதார அமைச்சுச் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீரமானம் ஆகும். அவ்வாறே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலின் மொழி வாசகங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது இணங்காமை அல்லது முரண்பாடுகள் உள்ளதாகக் காணக்கிடைப்பின், அவ்வாறான சந்தர்ப் பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வைத்தியர் பீ.ஜீ. மஹீபால,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
"சுவசிரிபாய"
இல 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2024, பெப்புருவரி 17.

மாதிரி விண்ணப்படிவம்

**சுகாதார அமைச்சின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழினுட்ப சேவை வகை (MN 03 - 2006 A) பதவிகளின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2024**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:-
(சிங்களம் S, தமிழ் - T, ஆங்கிலம் - E) : ☐
(குறித்த ஆங்கில எழுத்தினை கூண்டினுல் எழுதவும்)

வதிவிட மாவட்டம் : ☐

விண்ணப்பிக்கும் பதவி : ☐

01.
i. முதலெழுத்துக்களுடனான பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........

ii. முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ..........

iii. முதலெழுத்துக்களுடனான பெயர்: Mr/Mrs/Miss. ..........
(ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துக்களில்) - உதாரணம்:- Mr/~~Mrs/Miss.~~ SILVA A. B.

iv. முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்): ..........

02. வதிவிட முகவரி

i. நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கிலப் பேரெழுத்துக்களில்): ..........

ii. நிரந்தர வதிவிட முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ..........

03. பிறந்த திகதி:- வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.1 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது

வருடங்கள்: ☐☐☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

04. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

05. தொலைபேசி இலக்கம் (கையடக்க) ................................ நிலையான: ..................................

06. மின்னஞ்சல் முகவரி : .............................................................

07. பால் :- ஆண் : ☐ பெண் : ☐

08. இலங்கைப் பிரசையா என்பது பற்றி:- ஆம் : ☐ இல்லை : ☐

09. விவாகமானவரா / விவாகமாகாதவரா: ...................................................

10. கல்வித் தகைமைகள்:-

(அ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சை:-

வருடம்: ................................... பரீட்சை இலக்கம்: ...............................................

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |
| 06 | | |
| 07 | | |
| 08 | | |
| 09 | | |
| 10 | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சை:-

வருடம்:................................... பரீட்சை இலக்கம்:...............................................

| தொ/இ | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01 | | |
| 02 | | |
| 03 | | |
| 04 | | |
| 05 | | |

(இ) தொழில்சார் மற்றும் தொழினுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள்:-

| சான்றிதழ் | வழங்கிய நிறுவனம் | வருடம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(தொழில்சார் மற்றும் தொழினுட்பத் தகைமைகளுக்கான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்)

(ஈ) ஏனைய விசேட தகைமைகள் மற்றும் அனுபவங்கள்.

.................................................................................................................................
.................................................................................................................................
.................................................................................................................................
.................................................................................................................................

11. தாங்கள் ஏதேனுமோர் கிரிமினல் குற்றத்திற்காக எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீர்களா?
(ஆம் எனில், விபரங்களை வழங்கவும்) ...................................................................................................
.................................................................................................................................
.................................................................................................................................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள்:-

i. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :-.....................................
ii. செலுத்திய தொகை :- ...................................

இலங்கை வங்கிக் கிளையொன்றில் ரூ. 1,000.00 தொகையினைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை கழறாத வண்ணம் இங்கு ஒட்டவும் (விண்ணப்பத்தின் மற்றும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை தன்னகத்தே வைத்துக் கொள்ளுதல் பின்னர் பயனளிக்கலாம்).

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :-**

இந்த விண்ணபத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும் மற்றும் சரியானவையுமென கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் அடங்கும் ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அவ்விண்ணப்பம் இரத்தாகும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி:................................ ..............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. விண்ணப்பதாரரின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல்:

இவ் விண்ணபத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ..................................................................
என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்,

முழுப் பெயர் :- .........................................
பதவி :- .........................................
முகவரி :- .........................................
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்தவும்).

